ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1854 / 32 - 2014 මාර්තු 19 වැනි බදාදා - 2014.03.19

**1854 / 32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## மரணசாதனமில்லாத சொத்துக்கான உரிமைக்கோரிக்கைகளைக் கோருகின்ற அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்

### (பிரிவு 55)

குருநாகல் மாவட்டத்தில், ரிதீகம பெரும்பாகச் செயலாளர் பிரிவில், கனேகொட கிராமத்தில் வசித்த காலஞ்சென்ற திரு. சிங்கப்புலி ஹேனேகெதர ரணவீர என்பரின் மரணசாதனமில்லாத சொத்துத் தொடர்பாக.

இதற்கான அட்டணையில் விபரிக்கப்பட்டுள்ள காலஞ்சென்ற திரு. சிங்கப்புலி ஹேனேகெதர ரணவீர என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்கு உரிமைக்கோரிக்கை கொண்டுள்ள அல்லது அதில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆள்/ ஆட்கள், அத்தகைய மரணசாதனமில்லாதச் சொத்துக்கு அவரது / அவர்களது உரிமையை அல்லது அக்கறையைக் கூறி 2014.04.17 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் கீழே கையொப்பமிடப்பட்டுள்ளவருக்கு அவரது / அவர்களது உரிமைக்கோரிக்கையைச் சமர்பித்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யத்தவறும் விடயத்தில், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 55 (2) ஆம் (3) ஆம் பிரிவுகளின் கீழ் உரித்தைப் பதிவு செய்வதற்கு மறுதிறத்தவரில்லா நடவடிக்கை எடுக்கப்படும்.

**காமிணி இலங்கரத்ன,**
உரித்து நிர்ணய ஆணையாளர்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
இல. 1200/6, "மிஹிகத மெதுர",
இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை,
2014 ஆம் ஆண்டு மாத்து மாதம் 05 ஆம் திகதி.

**அட்டவணை**

| *பெரும்பாகச் செயலாளர் பிரிவு* | *கிராமம்* | *நில அளவீடு சார்ந்த பட இல.* | *காணித்துண்டு இல.* | *காணியின் பரப்பளவு (ஹெக்டயர்)* | *உரித்துச் சான்றிதழ்* | *பதிவு அலுவலகம் இல.* |
|---|---|---|---|---|---|---|
| ரிதீகம | கனேகொட | 420146 | பிரிவு இல.01 கா.து.இல.319 | 0.1248 | 0013655 குருநாகல் | குருநாகல் |

மு. கு:- மரணசாதனமில்லாச் சொத்துக்கான உரிமையை உரிமைக்கோரும் கடிதங்கள், நில அளவீடு சார்ந்த பட இலக்கத்தையும் காணித்துண்டு இலக்கத்தையும் அத்தகைய சொத்துக்கு உரிமைக்கோர உரிமையாளருக்குள்ள உரித்தையும் கூறுதல் வேண்டும். உறையின் மேல் இடதுபக்க மூலையில் " மரணசாதனமில்லாச் சொத்துக்கான விண்ணப்பம்" என்ற சொற்றொடர் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

04 - 96

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

*மு.கு.* - இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.